உ

கணபதிதுணை.

சைவாசாரியராகிய

படிக்காசுப்புலவர்

அருளிய

பழமொழிவிளக்க மென்னும்

தண்டலையார்சதகம்.

10

இஃது

சிதம்பரம்

அ. இரத்நசபாபதி முதலியார்

அவர்களால்;

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1893.

விலை அணா ௩.

ஸ்ரீ
ஸ்ரீமான்
ஆ. மே. சென்னகேசவலுநாயுடு
புத்தகம்
16-12-97

கணபதி துணை.

சைவாசாரியராகிய

படிக்காசுப்புலவர்சரித்திரச்சுருக்கம்,

——(*)——

* இந்நூலாசிரியர், தொண்டைமண்டலத்திலே, ¶ பொற்களத்தூரிலே, செங்குந்தமரபிலே யவதரித்து, சிவாநுக்கிரகத்தால் தமிழ்க்கலைமுழுதும் பயின்று, தெய்வீகம்விளங்கிய நல்வாக்கினைப்பெற்று, இல்லறவாழ்க்கையிலே இருக்குநாளில், அந்நாட்டிலுள்ள வல்லநகரத்தை யடைந்து, காளத்திபூபதி யென்பவனைக்கண்டு,

"பெற்றா ளொருபிள்ளை யென்மனை யாட்டியப் பிள்ளைக்குப்பால்
பற்றா து கஞ்சி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச்
சிற்றாளு மில்லையிவ் வெல்லா வருத்தமுந் தீரவொரு
கற்றா தரவல்லை யாவல்லை மாநகர்க் காளத்தியே."

என்னுஞ் செய்யுளைப்பாடி அவரால், சில பாற்பசு வளிக்கப்பெற்று, பின்னர்.

"வழிமேல் விழிவைத்து வாடாம லென்மனையாளு மற்றோர்
பழியாமற் பிள்ளையும் பாலென் றழாமற் பகைபொனுஞ்சொல்
மொழியாமலென்னை வரவிட்டபாவை முசித்துச்சதை
கழியாமலாவளித் தாய் வல்லமா நகர்காளத்தியே."

என்னுஞ் செய்யுளால் அவனைப்புகழ்ந்து பாடினர்,

அன்றியும், மாவண்டூரிலே மிக்கபிரபுவாயிருந்த கஸ்தூரி முதலியார் குமாரராகிய கறுப்பமுதலியா ரென்னும் ஓர் வேளாளர் வேண்டுகோளின்படி, தொண்டைமண்டலசதகம் என்னும் ஒரு பிரபந்தத்தைப்பாடி அரங்கேற்றி, அவரால் வேண்டிய திரவியங்கள் அளிக்கப் பெற்றமையேயன்றி, பல்லக்குஞ் சுமக்கப்பெற்று, அவ்வுவகைமேலீட்டினால்,

---

* இவர்காலம் சுமார் (உருo) வருடங்கட்கு முன்னென்பர்.

¶ தென்களத்தூர் என்பதும் வழக்கம்.

" காவைவேன் றிடுகத் தூரி கண்மணிக் கறுப்ப னென்னு
மாவையம் பதியான் றொண்டை மண்டல சதகங்கேட்டு
நாவலர் புகழ்ந்து மெச்ச நவநிதி பொழிந்து நன்றுப்
பூவுல கெங்கும் போற்றப் புகழ்நிலை நிறுத்தினனே." எனவும்,

" ஓர்கறுப்பு மில்லாத தொண்டைவள நன்னாட்டி லுசித வேளைச்
சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி மன்னனருள் சேயைப்பார்மே,
லார்கறுப்பனென் றுசொல்லி யழைத்தாலு நாமவனையன்பினாலே,
பேர்கறுப்ப னிறஞ்சிவப்பன் கீர்த்தியினால் வெளுப்பனெனப்
பேசுவோமே." எனவும்,

"எல்லப்ப னம்மையப்பன் றருதிருவேங் கடநாத னெழிற்சீ ராமன், வல்லக்கொண் டையன்மாதை வேங்கடேசுரன்போல வரிசை செய்தே, செல்வத்தம் பியருடனே கத்தூரி மகன்கறுப்பன் றெருவீதிக்கே, பல்லக்குத் தான் சுமந்தா னது நமக்கோ ராயிரம் பொன் பரிசு தானே."
எனவும் வழங்கும் செய்யுண்முதலியவற்றாற் புகழ்ந்து மகிழ்ந்திருந்தனர்.

பின்பு பல தலங்களையும் தரிசித்து வணங்கிக்கொண்டு சிதம்பரத்தைச்சேர்ந்து சிற்சபாநாயகனையும் சிவகாமியம்மையையும் தரிசித்து,

" பொல்லாத மூர்க்கருக் கெத்தனை தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க்குண் டான குணம்வரு மோநடு ராத்திரியிற்
சல்லாப் புடைவை குளிர்தாங்கு மோநடுச் சந்தைதனிற்
செல்லாப் பணஞ்செல்லு மோதில்லை வாழுஞ் சிதம்பரனே."
எனவும்,

" வேல்கொடுத் தாய்திருச் செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவாள னுக்குக் கவுணியர்க்குப்

பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாயன்னையேயெனக் கேதுங் கொடுத்திலையே''

எனவும் துதித்து அங்கே பெருமான் பஞ்சாக்ஷரப்படியில் ஐந்து பொற்காசு வைத்தருளத் திருவருளைப் புகழ்ந்து அதனாற் படிக்காசுப்புலவரெனப் பெயர்வழங்க அத்தலத்தை யரிதினகன்று தென்னாட்டை யடைந்து இரகுநாதசேதுபதியைக் கண்டு,

"மூவேந் துவுமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொருடிரு
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே.''

என்னுஞ் செய்யுளைப்பாடி சில பரிசுபெற்று, பல்லக்குமுதலிய விருதுகளுடன் மதுரையை யடைந்தபொழுது, அந்நாட்டை யாண்டிருந்த திருமலை நாயகர் இவரது ஆரவாரத்தை நோக்கி கிளிக்கூட்டுச் சிறையிலே அடைத்துவைக்க, அத்தருணத்து,

"நாட்டிற் சிறந்த திருமலை யாதுங்க நாகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச னென்னுமொர் பைங்கிளியைக்
கூட்டி லடைத்துவைத் தாயினா தாவென்று கூப்பிடுதே.''

என்னுஞ் செய்யுளைப்பாடி, அவனை வசப்படுத்தி, பரிசுபெற்றுத்தங்கியிருந்தனர்.

அதன்பின்பு, காயற்பட்டணத்தை யடைந்து,

"காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்க டொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்ச மனுதினமும்
ஈய்ந்து சிவந்தது மால்சீதக் காதி யிருகரமே.'' எனவும்,

" தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத் தான்புகழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி யவர்கடம் வாயி லொருபிடிமண்
போட்டா னவனு மொளித்தான் சமாதிக் குழிபுகுந்தே."

எனவும் வழங்குஞ் செய்யுண் முதலியவற்றால், சீதக்காதியைப் புகழ்ந்து, மிகவுயர்ந்த வைரமோதிரமுதலிய பரிசுபெற்று, திருச்செந்தூரை யடைந்து, முருகக்கடவுளைத் தரிசித்து,

" முற்கரை யப்பனை யேறவிட் டாட்கொண் முதல்வருள்ளக்
கற்கரைக் கும்படி போதித் திடுங்கரு ணைக்கடலைச்
சிற்பரைக் குட்டியை யெங்கெங்குந் தித்திக்குஞ் செங்கரும்பின்
சர்க்கரைக்கட்டியைக் கண்டேன்செந் தூரொனுந்தானத்திலே"

என்பது முதலிய செய்யுட்களாற் றுதித்து மற்றுந் தலங்களைத் தரிசித்து வணங்கித் தண்டலைநீணெறி யென்னுந் தலத்தைத் தரிசித்து அங்குள்ள அன்பர்கள் வேண்டுகோளின்படி இச் சதகத்தை யருளிச்செய்து சந்நிதியி லரங்கேற்றி வசித்திருந்து சின்னுட் சென்றபின் தருமபுர ஆதீனத்தில் அப்பொழுது விளங்கிய ஞானதேசிகரால் ஞானதீக்ஷையும் சந்நியாசமும் பெற்று வசிக்குங்கால் ஒருதினம் காவிரிநதியில் ஸ்நானத்திற்குச் சென்றபொழுது தவசுப்பிள்ளையினிடம் தோய்க்கத் தந்த வஸ்திரத்திலொன்றை வெள்ளம் இழுத்துக்கொண்டு போய்விட்டமையால் அவன் வருந்துதல் கண்டு,

" அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினு னம்மையது தப்பாதோ—அப்பாகேள்
இக்கலிங்கம் போனுலென் னேகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்க முண்டே துணை"

என்னுஞ் செய்யுளால் தமது ஆதீன சம்பிரதாயப்படி தமக்கு வழிபடுகடவுளாய் விளங்கும் சொக்கலிங்கமூர்த்தியைத் துதித்து அவ்

வத்திரம் மீண்டுங் கரையில் வரப்பெற்றுத் தமது நியதிமுடித்து அவனையு மழைத்துச் சென்றனர்.

இவ்வாறு பல விசித்திரப் பாக்களை இயற்றிக்கொண்டு ஞானசாரிய ருவக்குமாறு சிலகால மணுக்கத்தொண்டரா யமர்ந்திருந்து பின்னர் அவ்வாசிரியர் ஆக்ஞைப்படி வைத்தீசுரர் சந்நிதியை யடைந்து அக்கடவுளின் கட்டளையை நடாத்திக்கொண்டு படிக்காசுத் தம்பிரானென அதிகபிரபலமாய் வாழுநாளில், அத்தலத்தைச் சுட்டிப் **புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம்** என்னும் ஓர் பிரபந்தமியற்றி அச்சந்நிதியில் அரங்கேற்றி வசித்தனர்.

அதன்பின்பு முன்னர் தமக்குப் படிக்காசு தந்து திருவருள் பாலித்த சிற்சபாநாயகர் சந்நிதியிலேயே தொண்டுசெய்து கதியடைய வேண்டுமென்னும் அவா மேலிட்டால் ஞானசாரிய ரனுமதிபெற்றுச் சிதம்பரத்தைச் சேர்ந்து ஒரு திருமடம் வகுத்து அதிலிருந்துகொண்டு அக்கடவுளுடைய தொண்டை வகித்துத் தினந்தோறும் ஆலயத்தை யடைந்து சபாநாயகரைத் தரிசிக்கும்பொழுது, அக்கடவுள் பஞ்சாக்ஷரப்படியில் பொற்காசு ஐந்துவைத்தருளப்பெற்று, சைவாசாரியராகச் சிலகாலம் நன்மாணாக்கர்களுக்கு ஞானோபதேசம் பாலித்து வீற்றிருந்து, சில பிரபந்தங்களையும் அருளிச்செய்து, அக்கடவுளுடைய திருவடி நீழலை யடைந்தனர்.

திருச்சிற்றம்பலம்.

இவ்வாசிரியரியற்றும் செய்யுட்டிறத்தைப்பற்றிப் பலபட்டைச் சொக்கநாதப்புலவரென்பவர்,

"மட்டாருந்தென்களந்தைப்படிக்காச னுரைத்ததமிழ்வரைந்த வேட்டைப், பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும் பரிமளிக்கும் பரிந்த வேட்டைத், தொட்டாலுங் கைம்மணக்குஞ் சொன்னாலும் வாய்மணக்குந் துய்ய சேற்றில், நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினது நளினந்தானே."

என்று புகழ்ந்திருக்கின்றனர். அன்றியும்,

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோ செயங்கொண்டான் விருத்த மென்னு, மொண்பாவி லுயர்கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக் கூத்தன், கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காள மேகம், பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொ ணாதே"

எனவும் ஓர் செய்யுள் வழங்கிவருகின்றது; ஆனால், இந்நூலும் வேளூர்க்கலம்பகமுந்தவிர வேறு அரிய சந்தப்பாக்களொன்றுங்கிடைக்கவில்லை; இந்நூலும் பிரதி கிடைப்பதருமையால் கிடைத்த பிரதிகளைக்கொண்டு மிக முயன்று பரிசோதித்து அச்சிடப்பட்டது. இதன்றி வேறு ஏதேனும் கிடைக்கப் பெற்றுள்ளவர்கள் தயைசெய்து கீழ்க்கண்ட விலாசப்படி எமக்கனுப்பில் வந்தனஞ்செய்தேற்று விரைவில் சுத்தபாடமாக வழங்குவிப்போம்.

இங்ஙனம்

சிதம்பரம் - அ. இரத்நசபாபதி முதலியார்,
1, கெ. குமரப்பமுதலி வீதி, சென்னை.

உ

கணபதி துணை.

பழமொழிவிளக்கமென்னும்

தண்டலையார்சதகம்.

காப்பு.

ஓர்கொண்டகற்பகத்தின்வாதாவிநாயகனைத்தில்லைவாழுங்
கார்கொண்டகரிமுகனைவிகடசக்ரகணபதியைக்கருத்துள்வைப்பாம்
பேர்கொண்டஞானநாயகிபாகன்றண்டலையெம்பெருமான்மீதில்
ஏர்கொண்டநவகண்டமிசைந்தபழமொழிவிளக்கமியம்பத்தானே.

வேதநெறி விளம்பியசொல்லாகமநூல் விளம்பியசொல் மிகுபுராணம்,—ஏதுவினிற் காட்டியசொல் விலக்கணச்சொல் விசைந்த பொருளெல்லா நாடி,—ஆதிமுத லுலகுதனில் விளங்குபழமொழி விளக்க மறிந்துபாடச்,—சோதிபெறு மதவேழ முகத்தொருவனகத் தெனக்குத் துணைசெய் வானே.

அவையடக்கம்.

வள்ளுவர்நூலாதி பலநூலிலுளவரும்பொருளைவண்மையாக
உள்ளபடிதெரிந்துணர்ந்தபெரியவர்கண்முன்னுமொருவன்போல
பள்ளமுதீருலகிற்பரவு பழமொழிவிளக்கம் பரிந்துகூறல்
வெள்ளைமதியினன்கொல்லத்தெருவதனிலூசிவிற்கும்வினையதாமே.

நூல்.

வரமளிக்குந் தண்டலையார் திருக்கோயி லுட்புகுந்து வலமாய் வந்தே,—ஒருவிளக்கா கிலும்பசுவி னெய்யுடன்று மரைநூலி னொளிர வைத்தால்,—கருவிளக்கும் பிறப்புமில்லை யிறப்புமில்லை கைலாசங் காணி யாகும்,—திருவிளக்கிட் டார்தமையே தெய்வமறிந் திடும் வினையுந் தீருந் தானே. (1)

கூன்செய்த பிறையணியுந் தண்டலையார் கருணைசெய்து கோடி கோடி,—யான்செய்த வினையகற்றி நன்மைசெய்தா லுபகார மென்று ளுண்டோ,—ஊன்செய்த வுயிர்வளரத் தவந்தான நடந்தேற வுத வியாக,—வான்செய்த நன்றிக்கு வையகமென் செய்யுமதை மறந் திடாதே. (2)

அட்டதிசை யெங்கணும்போ யலைந்தாலும் பாதாள மதிற்சென் றாலும்,—பட்டமென வானூடு பறந்தாலு மென்னவதிற் பயனுண் டாமோ,—பிட்டுவர மண்சுமந்த தண்டலையா ரேமுன்னாள் பெரி யோர் கையில்,—இட்டபடி யேயொழிய வேறாசைப் படில்வருவ தில்லை தானே. (3)

தன்மமதைச் செயல்வேண்டுந் தண்டலைநீ ணெறியாரே தயவு செய்வார்,—வன்மவினை செயல்வேண்டாம் பொய்வேண்டாம் பிறரை யொன்றும் வருத்தல் வேண்டாம்,—கன்மநெறி வரல்வேண்டாம் வேண்டுவது பலர்க்குமுப கார மாகும்,—நன்மைசெய்தார் நலம்பெ றுவர் தீமைசெய்தார் தீமைபெற்று நலிவர் தாமே. (4)

புல்லறிவுக் கெட்டாத் தண்டலையார் வளந்தழைத்த பொன்னி நாட்டிற்,—சொல்லறமா தவம்புரியுஞ் சவுபரியுந் துறவறத்தைத் திறந்து மீண்டான்,—நல்லறமாம் வள்ளுவர்போற் குடிவாழ்க்கை மனைவியுட னடத்தி நின்றால்,—இல்லறமே பெரிதாகுந் துறவறமும் பழிப்பின்றே வியற்கை தானே (5)

முக்கணர்தண் டலைநாட்டிற் கற்புடைமங் கையர்மகிமை மொழி
யப் போமோ,—ஒக்குமெரி குளிரவைத்தா ளொருத்திவில்வே டனை
யெரித்தா ளொருத்தி மூவர்,—பக்கமுற வமுதளித்தா ளொருத்தி
யெழு பரிதடுத்தா ளொருத்தி பண்டு,—கொக்கெனவே நினைந்தனை
யோ கொங்கணவா வென்றொருத்தி கூறி னாளே. (6)

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலுங் குலமுழுது நன்மை
யுண்டாம்,—அன்றியறி வில்லாத பிள்ளையொரு நூறுபெற்று மாவ
துண்டோ,—மன்றினடம் புரிவாரே தண்டலையா ரேசொன்னேன்
வருடந் தோறும்,—பன்றிபல வீன்றுமென்ன குஞ்சரமொன் றீன்
றதனாற் பலனுண் டாமே. (7)

அல்லமருங் குழலாளை வரகுணபாண் டியராச ரன்பா லீந்தார்,—
கல்லைதனின் மென்றுமிழ்ந்த வூனமுதைக் கண்ணப்பர் கனிவா லீந்
தார்,—சொல்லியதண் டலையார்க்குக் கீரையுமா வடுவொரு தொ
ண்ட ரீந்தார்,—நல்லதுகண் டாற்பெரியோர் நாயகனுக் கென்றதனை
நல்கு வரோ. (8)

திருவிருந்த தண்டலையார் வளநாட்டி லில்வாழ்க்கை செலுத்து
நல்லோர்,—ஒருவிருந்தா கிலுமின்றி யுண்டபகல் பகலாமோ வுற
வாய்வந்த,—பெருவிருந்துக் குபசாரஞ் செய்தனுப்பி யின்னமெங்கே
பெரியோ ரென்று,—வருவிருந்தோ டுண்பதல்லால் விருந்தில்லா
துணுஞ்சோறு மருந்து தானே. (9)

பொற்குடையும் பொற்றுகிலும் பொற்பணியுங் கொடுப்பதென்ன
பொருளோவென்று,—நற்கமல முகமலர்ந்தே யுபசாரமிக்கவின்சொ
னடந்தா னன்றே,—கற்கணையு மொழிபாகர் தண்டலையார் வளநாட்
டிற் கரும்பின் வேய்ந்த,—சர்க்கரையின் பந்தலிலே தேன்மாரி பொ
ழிந்துவிடுந் தன்மை தானே. (10)

குறும்பெண்ணு துயர்ந்தநல்லோ ராயிரஞ்சொன் னுலுமதைக் குறிக்கொ ளாமல்,—வெறும்பெண்ணு சையிற்சுழல்வேன் மெய்ஞ்ஞானம் பொருந்தியுனை வேண்டே னந்தோ,—உறும்பெண்ணு ரமுதிடஞ்சேர் தண்டலைநீ ணெறியேயென் னுண்மைதேரில்,—எறும்பெண்ணு யிரமப்பா கழுதையுங்கை கடந்ததெனு மெண்ணந்தானே. (11)

துப்பிட்ட வாலம்விதை சிறிதெனினும் பெரிதாகுந் தோற்றம்போலச்,—செப்பிட்ட தினையளவு செய்தநன்றி பனையளவாய்ச் சிறந்து தோன்றும்,—கொப்பிட்ட வுமைபாகர் தண்டலையார் வளநாட்டிற் கொஞ்சமேனும்,—உப்பிட்ட பேர்கடமை யுளவளவாயு நினைக்குமிந்த வுலகந் தானே. (12)

மேட்டுக்கே விளைத்தவிளை வீணருக்கே செய்தநன்றி மேயும்பட்டி,—மாட்டுக்கே கொடுத்தவிலை பரத்தையர்க்கே தேடியிட்ட வண்மை யெல்லாம்,—பாட்டுக்கே யருள்புரியுந் தண்டலையார் வீதிதொறும் பரப்பி டாமல்,—காட்டுக்கே யெறித்தநிலாக் கானலுக்கே பெய்தமழை கடுக்குந் தானே. (13)

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும் பிறர்க்குறுதி தனைச்சொன்னுலும்,—அங்கனுல கிற்சிறியோர் தாமடங்கி நடந்துகதி யடையமாட்டார்,—திங்களணி சடையானே தண்டலையா னேசொன்னேன் சிறிது காலம்,—கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய் நல்லசுரைக் காயா காதே. (14)

உழையிட்ட விழிமடவா ருறவுவிட்டும் வெகுளிவிட்டு முலகவாழ்விற்,—பிழைவிட்டு மின்னமின்ன மாசைவிடா தலக்கழியப் பெற்றே னந்தோ,—தழையிட்ட கொன்றைபுனை தண்டலைநீ ணெறியேயென் றன்மை யெல்லாம்,—மழைவிட்டுந் தூவானம் விட்டதில்லை யாயிருந்த வண்மை தானே. (15)

கொச்சையிற்பிள் ளைக்குதவுந் தண்டலையார் வளநாட்டிற் கொடி
தாய் வந்த,—வச்சிரப்பிள் ளைக்குமுன மாதவனே புத்திசொன்னான்
வகையுஞ் சொன்னான்,—அச்சுதப்பிள் ளைக்குமந்த வாண்டவனோ புத்
திசொன்னா ராத லாலே,—துர்ச்சனப்பிள் ளைக்கூரார் புத்திசொல்லு
வாரொன்றே சொல்லு வாரோ. (16)

கறுத்தவிட முண்டருளுந் தண்டலையார் வளநாட்டிற் கடிய தீ
யோர்,—குறித்துமனை யாளவையிற் றுகிலுரிந்து மைவர்மனங் கோ
பித் தாரோ,—பறித்துரிய பொருண்முழுதுங் கவர்ந்தாலு மடித்தா
லும் பழிசெய் தாலும்,—பொறுத்தவரோ யரசாள்வர் பொங்கினவர்
காடுறைந்து போவர் தாமே. (17)

அள்ளித்தண் ணீறணியுந் தண்டலையார் வளநாட்டி லாண்மையுள்
ளோர்,—விள்ளுற்ற கல்வியுள்ளோர் செல்வமுள்ளோ ரழகுடை
யோர் மேன்மைநோக்கி,—உள்ளத்தி லழன்றழன்று நமக்கில்லை யெ
னவுளைத்திங் குழல்வாரெல்லாம்,—பிள்ளைப்பெற் றவர்தமைப்பார்த்
திருந்துபெரு மூச்செறியும் பெற்றி யோரே. (18)

மண்ணுலகா ளவுநினைப்பார் பிறர்பொருண்மே லாசைவைப்பார்
வலுமை செய்வார்,—புண்ணியமென் பதைச்செய்யார் கடைமுறையி
லலக்கழிந்து புரண்டே போவார்,—பண்ணுலவு மொழிப்பாகர் தண்
டலையார் வகுத்தவிதிப் படியல் லாமல்,—எண்ணமெல்லாம் பொய்
யாகு மௌனமே மெய்யாகு மியற்கை தானே. (19)

சொன்னத்தைச் சொல்லுமிளங் கிள்ளையென்பார் தண்டலை
யார்தொண்டுபேணி,—இன்னத்துக் கின்னதெனும் பகுத்தறிவொன்
றில்லாத வீன ரெல்லாம்,—தன்னைத்துக் கண்டவுடன் காணாமன்
முறைபேசிச் சாடை பேசி,—முன்னுக்கொன் றாயிருந்து பின்னுக்
கொன்றாய்நடந்து மொழிவர் தாமே. (20)

கொடியருக்கு நல்லபுத்தி சொன்னாலுந் தெரியாது கொடையில்லாத,—மடையருக்கு மதுரகவி யுரைத்தாலு மவர்கொடுக்க மாட்டார்கண்டீர்,—படியளக்குந் தண்டலைநீ ணெறியாரே யுலகமெலாம் பரவி மூடி,—விடியன்மட்டு மழைபெயினுமதிலேநட்டாங் கிஞ்சின் முளைவீசி டாதே. (21)

செங்காவி மலர்த்தடஞ்சூழ் தண்டலைநீ ணெறியேநின் செயலுண்டாகில்,—எங்காகி லென்னவவ ரெண்ணியதெல் லாமுடியு மில்லையாகில்,—பொங்காழி சூழுலகி லுள்ளங்கால் வெள்ளெலும்பாய்ப் போக வோடி,—ஐங்காதம் போனாலுந் தன்பாவந் தன்னுடனே யாகுந் தானே. (22)

தாயறிவாண்மகளருமைதண்டலைநீணெறிநாதர்தாமேதந்தை
ஆயறிவாரெமதருமைபரவையிடந்தூதுசென்றதறிந்திடாரோ
பேயறிவார்முழுமூடர்தமிழருமையறிவாரோபேசுவாரோ
நாயறியாதொருசந்திச்சட்டிபானையினந்தநியாயந்தானே. (23)

கட்டுமாங் கனிவாழைக் கனிபலவின் கனிகளுப கார மாகும், சிட்டருமவ் வணந்தேடும் பொருளையெல்லா மிரப்பவர்க்கே செலுத்தி வாழ்வார்,—மட்டுலவுஞ் சடையாரே தண்டலையா ரேசொன்னேன்வனங்க டோறும்,—எட்டிமரம் பழுத்தாலு மீயாதார் வாழ்ந்தாலுமென்னுண் டாமே. (24)

ஓதரியதண்டலையாரடிபணிந்துநல்லவனென்றுலகமெல்லாம்
போதமிகும்பெருடனே புகழ்படைத்து வாழ்பவனேபுருடனல்லால்
ஈதலுடனிரக்கமின்றிப்பொன்காத்தபூதமெனவிருந்தாலென்ன
காதவழிபேரில்லான்கழுதையோடொக்குமெனக்காணலாமே. (25)

பரியாமவிடுஞ்சோறுமூமைகண்டகனவுமொன்றுபரிசிலீயான்
அரிதானசெந்தமிழினருள்சிறிதுமில்லாதானறிவுமேதான்
கரிகாலன்பூசைபுரிதண்டலைநீணெறியாரேகதித்தவோசை
தெரியாதசெவிடன்காதினிற்சங்குகுறித்ததெனச்செப்பலாமே. (26)

முன்னரிய மறைவழங்குந் தண்டலையா ராகமத்தின் மொழிகே ளாமல்.—பின்னுயிரை வதைத்தவனுங் கொன்றவனுங் குறைத்தவ னும்பெருளோனும்,—அந்நெறியே சமைத்தவனு முண்டவனு நரகு றுவராத லாலே,—தன்னுயிர்போ லெந்நாளு மன்னுயிருக் கிரங்குவ துந்தக்க தாமே. (27)

உருவெடுத்த நாண்முதலா வொருசாணும் வளர்க்கவுட னுழல்வ தல்லால்,—மருவிருக்குநின்பாத மலர்தேடித்தினம்பணிய மாட்டே னந்தோ,—திருவிளக்கு மணிமாடத் தண்டலைநீ ளெறியேயென் செய்தி யெல்லாம்,—சருகரிக்க நேரமன்றித் தீக்காய நேரமில்லாத் தன்மை தானே. (28)

காதிலே திருவேடங் கையிலே செபமாலை கழுத்தின் மார்பின்
மீதிலே தாழ்வடங்கண் மனதிலே கரவடமாம் வேட மாமோ
வாதிலே யயன்றேடுந் தண்டலைநீணெறியாரே மனிதர் காணும்
போதிலே மவுனமிராப் போதிலே ருத்ராக்ஷப் பூசை தானே. (29)

மானொன்று வடிவெடுத்து மாரீசன் போய்மடிந்தான் மானேயென் று,—தேனொன்றுமொழிபேசிச் சீதைதனைச் சிறையிருக்கத்திருடிச் சென்றோன்,—வானொன்று மரசிழந்தான் தண்டலையார் திருவுளத் தின் மகிமைகாணீர்,—தானொன்று நினைக்கையிலே தெய்வமொன்று நினைப்பதுவுஞ் சகசந் தானே. (30)

கைசொல்லும் பனைகாட்டுங் களிற்றுரியார் தண்டலையைக் காணார் போலப்;—பொய்சொல்லும் வாயினர்க்குப் போசனமுங்கிடையாது பொருணில் லாது,—மைசொல்லுங் காரளிசூழ் தாழைமலர் பொய் சொல்லி வாழ்ந்ததுண்டோ,—மெய்சொல்லி வாழாதான் பொய்சொ ல்லி வாழ்வதில்லை மெய்மை தானே. (31)

அந்தணரை நல்லவரைப் பரமசிவ னடியவரை யகந்தையாலோர், —நிந்தனைசொன் னாலுமென்ன வைதாலு மென்னவதி னிஷேத மு

ண்டோ,—சுந்தரர்க்குத் தூதுசென்ற தண்டலைநீணெறியாரே தலங்கும்பூர்ண,—சந்திரனைப்பார்த்துநின்று நாய்குரைத்த போதிலென்ன தாழ்ச்சி தானே. (32)

கோடாமற் பெரியவர்பா னடப்பதன்றிக் குற்றமுடன் குறைசெய்தோர்கள்,—ஆடாகிக் கிடந்தவிடத் ததன்மயிருங் கிடவாம லழிந்துபோவார்,—வீடாநற் கதியுதவுந் தண்டலையா ரேசொன்னேன் மெய்யோ பொய்யோ,—கோடாலிக் காம்பேதன் குலத்தினுக்குக் கேடான கொள்கை தானே. (33)

சின்னமெங்கே கொம்பெங்கே சிவிகையெங்கே பரியெங்கே சிவியா ரெங்கே,—பின்னையொரு பாழுமில்லை நடக்கைகுலைந் தானுடனே பேய்பேயன்றே,—சொன்னவிலுந் தண்டலையார் வளநாட்டிற் குங்கிலியத் தூபங் காட்டும்,—சன்னதமா னதுகுலைந்தாற் கும்பிடெங்கே வம்பரிது தனையெண்ணுரே. (34)

சிறுபிறைதுன் னியசடையார் தண்டலைசூழ் பொன்னிவளஞ் செழித்த நாட்டில்,—குறையகலும் பெருவாழ்வு மைந்தருமக் களும்பொருட்டாக் குறித்திடாமல்,—மறைபயில்பத் திரகிரியும் பட்டினத்துப் பிள்ளையுஞ்சேர் மகிமை யாலே,—துறவறமே பெரிதாகுந் துறவிக்கு வேந்தனொரு துரும்பு தானே. (35)

பேரிசைக்குஞ்சுற்றமுடன்மைந்தருமாதருஞ்சூழப்பிரபஞ்சத்தே
பாரியையுற்றிருந்தாலுந்திருநீற்றிற்கழற்காய்போற்பற்றில்லாமல்
சீரிசைக்குந்தண்டலையாரஞ்செழுத்தைநினைக்கின்முத்திசேரலாகும்
ஆரியக்கூத்தாடுகினுங்காரியமேற்கண்ணுவதறிவுதானே. (36)

இரந்தனையித் தனைநாளும் பரந்தனைநா னென்றலைந்தா யினிமேலேனும்,—கரந்தைமதி சடையணியுந் தண்டலைநீ ணெறியாரே காப்பாரொன்னும், - உரந்தனைவைத் திருந்தபடி யிருந்தவருக் குள்ளதெல்லா முண்டாமுண்மை,—மரந்தனைவைத் தவர்நாளும் வாடாமற் றண்ணீரும் வார்ப்பர் தாமே. (37)

நாற்கவியும் புகழவருந் தண்டலையார் வளநாட்டி னல்ல நீதி,—மார்க்கமுட னடந்துசெங்கோல் வழுவாமற் புவியாளும் வண்மை செய்த,—தீர்க்கமுள்ள வரசனையே தெய்வமென்பார் கொடுங்கோன்மை செலுத்தி நின்ற,—மூர்க்கமுள்ளவரசனுந்தன் மந்திரியு மாழ் நரகின் மூழ்கு வாரே. (38)

ஓதரியவித்தைவந்தா லரியசபைக் கழகாகு முலகில் யார்க்கும்,—ஈதலுட னறிவுவந்தா லினியகுணங் களுக்கழகா யிருக்கு மன்றே,—நீதிபெறு தண்டலையார் திருநீறு மெய்க்கழகாய் நிறைந்து தோன்றும்,—காதிலணி கடுக்கனிட்டான் முகத்தினுக்கே யழகாகிக் காணுந் தானே. (39)

பாரதியா ரண்ணுவிப் புலவனென்பார் கல்வியினிற் பழக்க மில்லார்,—சீரறியார் தலையறியார் பல்லக்கே றுவர்புலமை செலுத்திக் கொள்வார்,—ஆரணியுந் தண்டலைநீ ணெறியாரே யிலக்கணநூ லறியா ரேனும்,—காரிகையா கிலுங்கற்றுக் கவிசொல்லார் பேரிகொட்டக் கடவர் தாமே. (40)

அருண்மிகுத்த வாகமநூல் படித்தறியார் கேள்வியையு மறியார் முன்னே,—இருவினையின் பயனறியார் குருக்களென்றே யுபதேச மெவர்க்குஞ் செய்வார்,—வரமிகுத்த தண்டலைநீ ணெறியாரே யவர்கிரியா மரர்க்க மெல்லாம்,— குருடனுக்குக் குருடன்கோல் கொடுத்துவழி காட்டிவருங் கொள்கை தானே. (41)

நேற்றுள்ளா ரின்றிருக்கை நிச்சயமோ வாதலினு னினைந்த போதே,—ஊற்றுள்ள பொருளுதவி யறந்தேடி வைப்பதறி வுடைமையன்றே,—கூற்றுள்ள மலையவருந் தண்டலையா ரேசொன்னேன் குடபால் வீசும்,—காற்றுள்ள போதெவருந் தூற்றிக்கொள் வதுநல்ல கருமந் தானே. (42)

வர்க்கத்தார் தமைவெறுத்த விருத்தருமாய் மெய்ஞ்ஞான வடிவ மானோர்,—கற்கட்டா லியமடமுங் காணியுஞ்செம் பொனுந்தேடுங் கரும மெல்லாம்,—பொற் கொத்தாஞ் செந்நெல்வயற் றண்டலையா ரேசொன்னேன் பொன்னு டாளும்,—சொர்க்கத்தே போம்போதுங் கக்கத்தே ராட்டினதைச் சுமந்த வாறே. (43)

ஆம்பிள்ளா யெனக்கொடுக்கும் பெரியோரை யடுத்தவரை யவ ளிக்கெல்லாம்,—நாம்பிள்ளா யதிகமென்பார் நண்ணுருமேவல்செய நாளும் வாழ்வார்,—வான்பிள்ளா யெனுமேனித் தண்டலையார் பூஷ ணமாய் வளர்ந்த நாகம்,—என்பிள்ளாய் கருடாநீ சுகமோவென் றுரைத்தவித மென்னலாமே. (44)

வடியிட்ட புல்லர்தமை யடுத்தாலும் விடிவதுண்டோ மலிநீர்க் கங்கை,—முடியிட்ட தண்டலைநா தனைப்புகழிற் பெருவாழ்வு முழு து முண்டாம்,—மிடியிட்ட வினைதீருந் தெய்வமிட்டும் விடியாமல் வீணர் வாயிற்,—படியிட்டு விடிவதுண்டோ வவரருளே கண்ணுகப் பற்று வீரோ. (45)

பொலியவளம் பலதழைத்த தண்டலைநீ ணெறிபாதம் போற்றி நா ளும்,—வலியவறஞ் செய்தறியீர் மறஞ்செய்வீர் நமன்றூதர் வந்து கூடி,—மெலியவறைந் திடும்பொழுது கலக்கண்ணீ ருகுத்தாலும் விடுவ துண்டோ,—எலியழுது புலம்பிடினும் பூனைபிடித் ததுவிடு மோ வென்செய் வீரோ. (46)

மற்றவரோதமிழ்பாடி நாட்டவல்லார் நக்கீரன்வலியனுகி
வெற்றிபுனைமீனுக்ஷி சுந்தரநாயகரடுத்து விளம்பும்போதில்
பற்றுளதண் டலைவாழுங் கடவுளென்றும் பாராமற் பயப்படாமல்
நெற்றிவிழிகாட்டுகினுங் குற்றமேகுற்றமென நிறுத்தினுரோ. (47)

சீரிலகுந் தண்டலையார் திருவருளாலகமேறிச்செழித்த நாளில்
பாரியெனவாயிரம்பேர்க் கன்னதானங்கொடுக்கும் பலனைப்பார்க்க

கேரிடும்பஞ்சந்தனிலே யெவ்வளவாகிலுங்கொடுத்தானீதியர்கும்
மாரிபதிங்கலநீரிற் கோடைதனிலொருகுடநீர் வண்மைதானே.

பிறக்கும்போ தொருபொருளுங் கொடுவந்த தில்லையுயிர் பிரிந்து மண்மேல்,—இறக்கும்போ திலுங்கொண்டு போவதில்லை யென்று சும்மா விருந்து வீணே,—பிறக்குந்தா யினுமருள்வார் தண்டலையிற் சேராமற் றேச மெல்லாம்,—பறக்குங்கா கமதிருக்குங் கொம்பறியா தெனத்திரிந்து பயன்பெ றூரோ. (49)

வைதிடினும் வாழ்த்திடினு மின்பதுன்பம் வந்திடினும் வம்பு கோடி,—செய்திடினுந் தண்டலைநீ ணெறியார்தஞ் செயலென்றே தெளிவ தல்லால்,—மெய்தவிர வவர்செய்தா ரிவர்செய்தா ரெனநாடி வெறுக்க லாமோ,—எய்தவர்தம் மருகிருக்க வம்பைநொந்த கருமமென்ன வியழ்பு வீரோ. (50)

வாங்கால முண்டசெழுந் தண்டலையா ரடிபோற்றி வணங்கி நாடிப்
போங்காலம் வருமுன்னே புண்ணியஞ்செய்தரியகதிபொருந்துருமல்
ஆங்காலமுள்ளதெல்லாம் விபசாரமாகியறி வழிந்துவீணே
சாங்காலஞ் சங்கரா சங்கரா வெனின் வருமோ தருமந் தானே. (51)

சுற்றமாய் நெருங்கியுள்ளார் தனையடைந்தார் கற்றறிந்தார் துணை வே றில்லார்,—உற்றவே தியர்பெரியோர்க் குதவியன்றிப் பிறர்க்குதவு மூதவி யெல்லாம்,—சொற்றநான் மறைபரவுந் தண்டலையா ரேசொன்னேன் சுமந்தே நொந்து,—பெற்றதாய் பசித்திருக்கப் பிராமணபோ சனநடத்தும் பெருமை தானே. (52)

துன்மார்க்கர்க் காயிரந்தான் சொன்னாலு மறந்துவிட்டுத் துடுக்கே செய்வார்,—சன்மார்க்கர்க் கொருவார்த்தை சொலுமளவே மெய்யதனிற் றழும்பாக்கொள்வார்,—பன்மார்க்க மறைபுகழுந் தண்டலையா ரேசொன்னேன் பதமே யான,—நன்மாட்டுக் கோரடியா நற்பெண்டீர்க் கொருவார்த்தை நடத்தை யாமே. (53)

கரப்பார்க்கு நல்லகதி வருவதில்லை செங்கோவிற் கடல்சூழ் வையம்,—புரப்பார்க்கு முடிவிலே சுவர்க்கமல்லா னரகமில்லை பொய்யிதென்றால்,—உரப்பார்க்கு நலம்புரியுந் தண்டலையா ரேசொன்னே னொருமை யாக,—இரப்பார்க்கு வெண்சோறு பஞ்சமுண்டோ வொருக்காலு மில்லை தானே. (54)

படுங்கோலமறியாமற் றண்டலையார் திருப்பணிக்கும் பங்கஞ் செய்வார்,—நெடுங்கோளுந் தண்டமுமாய் வீணரா வீணனைப்போ னீதி செய்வார்,—கெடுங்கோப மல்லாமல் விளைவுண்டோ மழையுண்டோ கேள்வி யுண்டோ,—கொடுங்கோன்மன் னவனாட்டிற் கடும்புலிவா ழுங்காடு குணமென் பாரே. (55)

உள்ளவரைக் கெடுத்தோரு முதவியற்று வாழ்ந்தோரு முறைபெற்றோருந்,—தள்ளிவழக் குரைத்தோருஞ் சற்குருவைப் பழித்தோருஞ் சாய்ந்தே போவார்,—பள்ளவயற் றண்டலையார் பத்தரடி பணிந்தோரும் பாடி னோரும்,—பிள்ளைகளைப் பெற்றோரும் பிச்சையிட்ட நல்லோரும் பெருகு வாரே. (56)

விற்பனர்க்கு வாழ்வுவந்தான் மிகவணங்கிக் கண்ணோட்ட மிகவுஞ் செய்வார்,—சொற்பருக்கு வாழ்வுவந்தாற் கண்டெரியா திறுமாந்து துன்பஞ் செய்வார்,—பற்பலர்க்கு வாழ்வுதருந் தண்டலையாரேசொன்னேன் பண்பில் லாத,—அற்பருக்கு வாழ்வுவந்தா லர்த்தராத்திரிகுடைமே லாகுந் தானே. (57)

விசையமிகுந் தண்டலையார் வளநாட்டி லொருத்தர்சொல்லை மெய்யா வெண்ணி,—வசைபெருக வநியாயஞ் செய்துபிறர் பொருளையெல்லாம் வலிய வாங்கி,—திசைபெருகுங் கீர்த்தியென்றுந் தன்மமென்றுந் தானமென்றுஞ் செய்வ தெல்லாம்,—பசுவினையே வதைசெய்து செருப்பினைத்தா னங்கொடுக்கும் பண்பு தானே. (58)

சிறியவரா முழுமூடர் துணைத்தனமா யுலகாளத் திறம்பெற் ருலும்,—அறிவுடையார் தங்களைப்போற் சற்குணமு ளுடையோர்களாக மாட்டார்,—மறிதருமான் மழுவேந்துந் தண்டலையாரேசொன்னேன் வாரி வாரி,—குறுணிமைதா னிட்டாலுங் குறிவடிவங் கண்ணுகிக் குணங்கொடாதே. (59)

கற்றவர்க்குக் கோபமில்லை கடந்தவர்க்குச் சாதியில்லை கருணைகூர்ந்த,—நற்றவர்க்கு விருப்பமில்லை நல்லவருக் கொருகாலு நரகமில்லை,—கொற்றவருக் கடிமையில்லை தண்டலையார் மலர்ப்பாதங் கும்பிட் டேத்தப்,—பெற்றவர்க்குப் பிறப்பில்லை பிச்சைசோற் றினுக்கில்லை பேச்சுத் தானே, (60)

பரங்கருணை வடிவாகுந் தண்டலையார் வளநாட்டிற் பருவஞ் சேர்ந்த,—சரங்குலவு காமகலை தனையறிந்த வதிருபத் தைய லாளை,—வரம்புறுதா ளாண்மையில்லா மட்டிகளுக் கேகொடுத்தால் வாய்க்குமோதான்,—குரங்கினது கையினறும் பூமாலை தனைக்கொடுத்த கொள்கை தானே. (61)

பிரசமுண்டு வரிபாடுந் தண்டலையார் வளநாட்டிற் பெண்க ளோடு,—சரசமுண்டு போகமுண்டு சங்கீத முண்டுசுகந் தானே யுண்டிங்,—குணாசிறந்த வறுமையுண்டோ விடுக்கமுண்டோ வொன்றுமில்லை யுலகுக் கெல்லாம்,—அரிசியுண்டேல் வரிசையுண்டா மக்காளுண்டாகின்மச்சா னன்புண் டாமே. (62)

தத்தைமொழி யுமைசேருந் தண்டலையார் பொன்னிவளந் தழைத்த நாட்டில்,—வித்தகமந் திரியில்லாச் சபைதனிலே நீதியில்லை வேந்தர்க் கெல்லாம்,—புத்திநெறி நீதிசொல்ல மந்திரியல் லாதொருவர் போதிப் பாரோ,—நித்தலுமுண் சோற்றின்முழுப் பூசினிக்காய் மறைத்ததுவு நிசம தாமே. (63)

நேசமுடன் சபையில்வந்தால் வேளையறிந் திங்கிதமா நிருபர் முன்னே,—பேசுவதே யுசிதமல்லா னடுவிலொரு வன்குழறிப் பேச லெல்லாம்,—வாசமிகுந் தண்டலைநீ ணெறியாரே யபிஷேக மலிநீ ராட்டிப்,—பூசைபண்ணும் வேளையிலே கரடியைவிட் டோட்டுவது போலுந் தானே. (64)

மண்ணுலகிற் பிறர்குடியை வஞ்சனையிற் கெடுப்பதற்கு மனநினைந்தே,—உன்னிடினு முனைத்திடினு மவன்றானே கெடுவனென்ப துண்மை யன்றோ,—தென்னவன்சோ ழன்பணியுந் தண்டலைநீ ணெறியாரே தெரிந்து செய்யுந்,—தன்வினை தன் னைச்சுடவோட் டப்பம் வீட் டைச்சுடவுந் தான்கண் டோமே. (65)

முன்பெரியோர் தொண்டுபட்டு நடந்தவழி தனைப்பழித்து முராணே பேசிப்,—பின்பலரை யுடன்கூட்டி நூதனமா நடத்துவது பிழைபா டெய்தில்,—துன்பறியாக் கதியருளுந் தண்டலைநீ ணெறியாரே தூய ளாகி,—அன்புளதா யைப்பழித்து மகளேதோ செயத்தொடங்கு மறிவு தானே. (66)

தண்ணமரு மலர்ச்சோலைத் தண்டலைநீ ணெறியேநின் றன்னைப் பாடில்,—எண்ணமிக விம்மையினு மறுமையிலும் வேண்டியதண் டிதையோ ராமல்,—மண்ணின்மிசை நரஸ்துதிகள் பண்ணியலைந் தேதிரிபா வாண ரெல்லாம்,—வெண்ணெய்தம திடத்திருக்க நெய் தேடிக் கொண்டலையும் வீணர் தாமே. (67)

அந்தணர்க்குத் துணைவேத மரசருக்குத் துணைவயவா ளவனி மீது,—மைந்தருக்குத் துணைதாயார் தூதருக்குத் துணைமதுர வார்த்தை யன்றோ,—நந்தமக்குத் துணையான தண்டலைநீ ணெறியாரே நண்பரான,—சுந்தரர்க்குத் துணைநாளு மேழையர்க்குத் தெய்வமே துணையென் பாரே. (68)

போரஞ்சா ரதிவீரர் பொருளஞ்சார் விதரணஞ்சேர் புருஷர் தோ யும்,—நீரஞ்சார் மறைமுனிவர் நெருப்பஞ்சார் கற்புடைய நிறை சேர் மின்னார்,—வாரஞ்சா முலையிடஞ்சேர் தண்டலையா ரேசொன் னேன் மதமா வென்னுங்,—காரஞ்சா திளஞ்சிங்கங் கனத்தவலி யாந் தாதன் காலஞ் சானே. (69)

உபசாரஞ் செய்பவரை விலக்கிடினு மவர்செய்கை யொழிந்து போகா,—தபசாரஞ் செய்வாரை யடித்தாலும் வைதாலு மதுநில் லாது,—சுபசாரத் தண்டலையார் வளநாட்டிற் றிருடருக்கத் தொழி னில் லாது,—விபசாரஞ் செய்வாரை மேனியெல்லாஞ் சுட்டாலும் விட்டி டாரோ. (70)

சகமிக்க தண்டலையா ரடிபோற்று மகாராசர் சபையில் வந்தால், —சுகமிக்க வேசையர்க்குப் பொன்னூறு கொடுப்பர்தமிழ் சொன் ன பேர்க்கோ,—அகமிக்க சோறிடுவா ரந்தணருக் கெனினுழி யரிசி யீவார்,— பகடிக்கோ பணம்பத்துத் திருப்பாட்டுக் கொருகாசு பா விப் பாரோ. (71)

பணந்தானே யறிவாகும் பணந்தானே வித்தையுமாம் பரிந்து தேடும்,—பணந்தானே குணமாகும் பணமில்லா தவர்பிணமாம் பா ன்மைசேர்வர்,—பணந்தானே பேசுவிக்குந் தண்டலைநீ ணெறியாரே பார்மீ திற்றான்,—பணந்தானே பந்தியிலே குலந்தானே குப்பை யிலே படுக்குந் தானே. (72)

புனங்காட்டு மண்ணும்விண்ணு மஞ்சவருங் காலனையும் போடா வென்றே,—இனங்காட்டு மார்க்கண்டன் கடிந்துபதி னாறுவய தென் றும் பெற்றான்,—அனங்காட்டுந் தண்டலையா ரடியாரொல் லாமொரு வர்க் கஞ்சு வாரோ,—பனங்காட்டு நரிதானுஞ் சலசலப்புக் கொரு நாளும் பயப்ப டாதே. (73)

சீரிலகுந் தண்டலையார் வளநாட்டி லொருசோழன் றிமை தீர,—வாரமிகும் பிள்ளைதனை யரிந்துண்டா னொருவேந்தன் மணந்துகொண்ட,—ஆர்வமிகு மனைக்கிழத்தி யாண்டிச்சி வடிவுகொண்டா ளாதலாலே,— ஊரிலொரு வன்றேழ னருமற்ற தேதார முண்மை தானே. (74)

தானவனு கியஞானச் செயலுடையார் மாதர்முலை தழுவி னும்,—ஆனதொழில் வகைவகையாச் செய்தாலு மனுபோக மவர்பாலுண்டோ,—கானுறையுந் தண்டலையா ரடிபோற்றுஞ் சுந்தரனார் காமி போலாய்,—மேனவிலுஞ் சுகம்படுக்கை மெத்தையறி யாதெனவே விளம்பி னாரே. (75)

சோறென்ன செய்யுமெல்லாம் படைத்திடவே செய்யுமருள் சுரந்து காக்கும்,—சோறென்ன செய்யுமெல்லா மழித்திடவே செய்யுமதன் சொரூப மாக்கும்,—சோறென்ன வெளிதேயோ தண்டலையார் தம்பூசை துலங்கச் செய்யும்,—சோறென்ன செய்யுமெனிற் சொன்னவண்ணஞ் செயும்பழமை தோற்றுந் தானே. (76)

எத்தருக்கு முலுத்தருக்கு மீனருக்கு மூடருக்கு மிரக்கம் பாரா,—மத்தருக்குங் கொடிதாமவ் வக்குணமே நற்குணமா வாழ்ந்து போவார்,—பத்தருக்கு நலங்காட்டுந் தண்டலையா ரேயறிவார் பழிப்பாரேனும்,—பித்தருக்குத் தங்குணமே நூலினுஞ்செம் மையதான பெற்றி யாமே. (77)

பன்னகவே ணிப்பரமர் தண்டலையார் நாட்டிலுள பலருங் கேளீர்,—தன்னறிவு தன்னினைவு தன்மகிமைக் கேற்றநடை தகுமேயல்லால்,—சின்னவரும் பெரியவர்போ லேநடந்தா லுள்ளதுபோஞ் சிறிய காகம்,—அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையுங் கெட்டவகை யாகுந் தானே. (78)

பேரான கவிராச ருடன்சிறிய கவிகளுமோர் ப்ரபந்தஞ்செய் வார்,—வீராதி வீரருடன் கோழைகளும் வாள்பிடித்து விருது சொல் வார்,—பாராளுந் தண்டலைநீ ணெறியாரே யிருவகையும் பகுத்துக் காணில்,—ஆராயு மகதேவ ராடிடத்துப் பேய்களுநின் ருடு மாறே.

செழுங்கள்ளி நிறைசோலைத் தண்டலைநீ ணெறியாரே திருடிக் கொண்டே,—எழுங்கள்ளர் நல்லகள்ளர் பொல்லாத கள்ளரினி யாரோ வென்ருல்,—கொழுங் கள்ளர் தம்முடன்கும் பிடுங்கள்ளர் திருநீறு குழைக்குங் கள்ளர்,—அழுங்கள்ளர் தொழுங்கள்ள ராசா ரக் கள்ளரிவ ராவர் தாமே. (80)

தனத்திலே மிகுத்தசெழுந் தண்டலையார் பொன்னிவளந் தழை த்த நாட்டில்,—இனத்திலே மிகும்பெரியோர் வாக்குமன மொன் ருகி யெல்லாஞ் செய்வார்,—சினத்திலே மிகுஞ்சிறியோர் காரிய மோ சொல்வதொன்று செய்வ தொன்று,—மனத்திலே பகையாகி யுதட்டிலே யுறவாகி மடிவர் தாமே. (81)

தேரோடு மணிவீதித் தண்டலையார் வளங்காணுந் தேசமெல்லாம், —போரோடும் விறல்படைத்து வீராதி வீரரென்னும் புகழே பெற் ருர்,—நேரோடு முலகத்தோ டொன்றுபட்டு நடப்பதுவே நீதி யாகும்,—ஊரோட வுடனேட நாடோட நடுவோட லுணர்வு தானே. (82)

இழைபொறுத்த முலைபாகர் தண்டலையார் வளநாட்டி லெடுத்த ராகம்,—தழுதழுத்துப் பாடுவதின் மௌனமா யிருப்பதுவே தக்க தாகும்,—குழைகுழைத்த கல்வியினுங் கேள்வியினுங் கல்லாமை குணமே நாளும்,—வழுவழுத்த வுறவதனின் வைரம்பற் றியபகை யே வண்மை யாமே (83)

அருப்பயிலுந் தண்டலைவாழ் சிவனடியா ரொக்குலத்தோ ராநு லென்ன,—உருப்பயிலுந் திருநீறுஞ் சாதனமுங் கண்டவுட னுகந்து போற்றி,—இருப்பதுவே முறைமையல்லா லேழையென்றுஞ் சிறி யரென்று மிகழ்ந்து கூறில்,—நெருப்பினையே சிறிதென்று முந்தா னை தனின்முடிய நினைந்த வாறே. (84)

உரங்காணும் பெண்ணாசை கொடிதாகும் பெண்புத்தி யுதவா தாகும்,—திரங்காணும் பெண்வார்த்தை தீதாகும் பெண்சன்மம் சன்ம மாமோ,—வரங்காணுந் தண்டலைநீ ணெறியாரோ பெண்ணிட த்தின் மயக்கத் தாலே,—இரங்காதபேருமுண்டோ பெண்ணென்ற வுடன்பேயு மிரங்குந் தானே, (85)

மையிலே தோய்ந்தவிழி வஞ்சியரைச் சேர்ந்தவர்க்கு மறுமை யில்லை,—மெய்யிலே பிணியுமுண்டாங் கைப்பொருளுங் கேடாகி விழல ராவார்,—செய்யிலே வளந்தழைத்த தண்டலையார் வள நாட்டிற் றெளிந்த தன்றோ,—கையிலே புண்ணிருக்கக் கண்ணாடி பார்ப்பதென்ன கருமந் தானே. (86)

காலமறி தண்டலையார் வளநாட்டிற் கொலைகளவுகள்ளே காமம், —சாலவருங் குருநிந்தை செய்பவர்பான் மேவியறந் தனைச்செய் தற்கும்,—சீலமுடை யோர்நினையார் பனையடியி லேயிருந்து தெளி ந்த வாவின்,—பாலினையே குடித்தாலுங் கள்ளென்பார் தள்ளென் பார் பள்ளென் பாரே. (87)

கைக்கெட்டா தொருபொருளுங் கண்டவர்க்கு நகையாகுங் கன மே யில்லை,—இக்கட்டாம் வருவதெல்லாம் லாபமுண்டோ கவறு கையி லெடுக்க லாமோ,—திக்கெட்டே றிவ கீர்த்தித் தண்டலையார் வளநாட்டிற் சீசியென்னச்,—சொக்கட்டா னெடுத்தவர்க்குச் சொக் கட்டான் சூதுபொல்லாச் சூது தானே. (88)

தனமேவும் புற்றடிமண் குருந்தடிமண் பிரமகுண்டந் தன்னி லேய்மண்,—மனமேவு மணியுடனே மந்திரமுந் தந்திரமு மருந்து மாகி,—இனமேவுந் தண்டலையார் தொண்டருக்கு வந்தபிணி யெல் லாந் தீர்க்கும்,—அனுபோகந் தொலைந்தவுடன் சித்தியாம் வேறு முள வவிழ்தந் தானே. (89)

கானமருங் கவரியொரு மயிர்படினு மிறக்குமது கழுதைக் குன் டோ,—மானமுடன் வாழ்பவனே மாபுருஷன் சுயோதனனை மறந் தாருண்டோ,—ஆனகஞ்சே ரொலிமுழங்குந் தண்டலையா ரேசொன் னே னரைக்கா சுக்குப்,—போனவபி மானமினி யாயிரம்பொன் கொடுத்தாலும் பொருந்தி டாதே. (90)

நிலைசேரு மதிகவித ரணசுமுக துரைகளுட னேச மாகிப்,—பல நாளு மேயவரை யடுத்தவர்க்குப் பலனுண்டாம் பயமு மில்லை,— கலைசேருந் திங்களணி தண்டலையா ரேசொன்னேன் கண்ணிற் காண,—மலைமீதி லிருப்பவரை வந்துபன்றி பாய்வதெந்த வண் ணந் தானே. (91)

பொறுமையுட னறிவுடையா ரிருந்தவிடம் விளக்கேற்றிப் புகுத வேண்டும்,—கெறுவமுட னகந்தையுள்ளா ரிறுமாந்து நடந்துதலை கீழா வீழ்வார்,—வறுமையினு மறுமையினுங் காணலாந் தண்டலை யார் வாழு நாட்டில்,—நிறைகுடமோ தளும்பாது குறைகுடமே கூத் தாடி நிற்ப தாமே. (92)

ஞாலமுறு நல்லவர்க்குச் செல்வம்வந்தா லெல்லவர்க்கு நாவலோ ர்க்கும்,—காலமறிந் தருமையுடன் பெருமையறிந் துதவிசெய்து கனமே செய்வார்,—மாலறியாத் தண்டலைநீ ணெறியாரே யவரிடத் தே வருவார் யாரும்,—ஆலமரம் பழுத்தவுடன் பறவையின்பாற் சீட்டெவரோ யனுப்பு வாரோ. (93)

சேணிலகு மதிச்சடையார் தண்டலையார் வளநாட்டிற் சிறந்த பூணிற்,—காணவரு நாணுடையார் கனமுடையா ரல்லாதார் கரும மெல்லாம்,—ஆணவலம் பெண்ணவல மாடியகூத் தவலமென வலைந் து கேடாம்,—நாணமில்லாக் கூத்தியர்க்கு நாலுதிக்கும் வாயிலெனு நடத்தை யாமே. (94)

அடுத்தமனை தொறும்புகுவாள் கணவனுணு முனமுண்பா ளடக்க மில்லாள்,—கடுத்தமொழி பேசிடுவாள் சிறுதனந்தே டுவெளிவளைக் கலந்து வாழ்தல்,—எடுத்தவிடைக் கொடியாரோ தண்டலையா ரோயெ வர்க்கு மின்ப மாமோ,—குடித்தனமே கெடவேண்டிப் பிடாரித லைப் பெண்டுவைத்துக் கொண்ட தாமே. (95)

களித்துவருஞ் செல்வருக்கு வலிமையுண்டு மிடியருக்குக் கனந்தா னுண்டோ,—வளைத்தமலை யெனுஞ்சிலையார் தண்டலைசூழ் தருமுலக வழக்கம்பாரீர்.—ஒளித்திடுவர் தம்மனையிற் பெண்டீரைக் கண்டவரு மொன்றும் பேசார்,—இளைத்தவன்பெண் டொன்று லெல்லார்க்கு மச்சினியா வியம்பு வாரோ. (96)

நொந்தவரும் பசித்தவரும் விருந்தினரும் விரகினரு நோயுள் ளோ ருந்,—தந்தமது வருத்தமல்லாற் பிறருடைய வருத்தமது சற்று மெ ண்ணார்,—இந்துலவுஞ் சடையாரோ தண்டலையா ரோசொன்னே னி ன்ற தாயின்,—அந்தமுலைக் குத்துவலி சவலைப்பிள் ளைசிறிது மறிந்தி டாதே. (97)

ஆழியெல்லாம் பாலாகி யவனியெல்லா மன்னமய மானுலென்ன சூழவருமிரவலர்க்குப் பசிதீரவுண்டிருக்குஞ் சுகந்தானுண்டோ எழுலகும் பணியவருந் தண்டலையாரோசொன்னே னெந்நாளும் நாழிநெல்லுக் கொருபுடவை விற்ருலுநிருவாணநாய்க்குத்தானே,()

கொச்சையிலே பாலுமுண்டோ கூத்தியர்க டம்மிடத்திற் குணந் தா னுண்டோ,—துச்சரிடத் தறிவுண்டோ துச்சரொங்கே போனாலுந் துணையா வாரோ,—நச்சரவத் தொடையாரோ தண்டலையா ரோயிந்த நாட்டல் லாமல்.—அச்சியிலே போனாலு மகப்பையனைக் காசதன் மே லார்கொள் வாரோ. (99)

நித்தமெழு நூறுநன்றி செய்தாலு மொருதீது நேரோ வந்தால்,
அத்தனையுந் தீதென்பார் பழிகருமக் கயவர்குண மகற்றலாமோ
வித்தகஞ்சேர் தண்டலையார் வளநாட்டிற்சாம்பலிட்டுவிளக்கினாலும்
எத்தனைசெய்தாலுமென்ன பித்தனைக்குத் தன்னாற்றமியற்கையாமே

முற்றிற்று.

வம்பரொல்லா மாதிக்க மிகுந்திருந்தா லென்னவது மாறியோ ய்ந்த,—பம்பரமாய் மூலையினிற் கிடந்திட்டா லென்னவதிற் பல னுண்டாமோ,—கம்புலவுந் தண்டலையார் வளநாட்டில் வருந்துபல கழுதை தாமும்,—அம்புவியிற் கிடந்தென்ன பாதாளந் தனிற்கிடந் தென் னாகுந் தானே. (1)

தண்டலையா ரடிபணிந்து தவந்தான முபகாரந் தருமஞ் செய்து,—கொண்டபொருள் விலைவாசி காணிதே டிக்கோடி கொடுப்ப தல்லால்.—வண்டருமா யொன்றுபத்து விலைகூறி யநியாய வட்டி வாங்கிக்,—கண்டவர்தங் கடுந்தேட்டுக் கண்ணையறக் கெடுக்குமிது கருமந்தானே. (2)

இதுகரும மிதனாலே யிதைமுடிப்பா யெனத்தொழிலை யெண் ணிச் செய்தால்,—அதுகருமம் பாராமற் றிருடியுமள் ளியும்பிரட்டா யலைவ தெல்லாம்,—மதியணியுந் தண்டலையார் வளநாட்டி னீராடு மாதர் தங்கள்,—முதுகினைத்தே யெனச்சொன்னால் முலைமீது கை யையிட்ட முறைமை தானே. (3)

பார்க்குளறி விருந்தாலும் படித்தாலுங் கேட்டாலும் பணிந்து வேத,—மார்க்கமுட னடந்தாலுஞ் சிறியவர்க்குப் பெரியவர்த மகி

மை யுண்டோ,—ஆர்க்குமருங் கதியுதவுந் தண்டலையா ரேசொன்னே ணுகாயத்தில்,—ஊர்க்குருவி தானுயரப் பறந்தாலும் பருந்தாகாதுண்மை தானே. (4)

வல்லமையான் முடிவதுண்டோ தலைகீழா நின்றாலும் வருவதுண்டோ,—அல்லதுதா னவன்செயலே யல்லாமற் றன்செயலாலாவதுண்டோ,—புல்லறிவான் மயங்காமற் றண்டலையா ரடிபணிந்து புத்தி யுண்டாய்,—இல்லதுவா ராதுநமக் குள்ளதுபோ காதெனவே யிருக்க லாமே. (5)

பேருணாகண் டறியாது தலைச்சுமையே கொள்சுமந்து பிதற்றுவோனும்,—போரினடந் தறியாது பதினெட் டாயுதஞ்சுமந்த புல்வியோனும்,—ஆரணிதண் டலைநாத ரகமகிழாப் பொருள்சுமந்த வறிவிலோனும்,—காரியமொன் றறியாக்குங் குமஞ்சுமந்த கழுதைக்கொப் பாவர் தாமே. (6)

சற்பூர வல்லியொரு பாகர்செழுந் தண்டலையார் கடலேழ் சூழ்ந்த,—நற்பூமி தனிற்பிறந்தோ ரெல்லோரு மக்களென நாட்ட லாமோ,—அற்பூரும் பண்புடையார் நற்குணமும் பண்பிலா ரழகுங் காணில்,—பொற்பூவின் வாசனையும் புன்முருக்கம் பூவுமெனப் புகலலாமே. (7)

சலியாமற் றண்டலையிற் றுயகனு ரருள்கொண்டு தருமஞ் செய்யப்,—பொலிவாகிக் கொழுமீதில் வந்தபொரு ளீந்தவைதாம் போகமீந்தால்,—மலிவாகிச் செல்வமுண்டாம் வயன்முழுதும் விளைந்திடுநன் மாரி யாகும்,—கலியாணப் பஞ்சமில்லை களப்பஞ்ச மில்லையொரு காலுந் தானே. (8)

இரக்கத்தா லுலகாளுந் தண்டலையா ரேசிவனே யெந்த நாளும்,—இரக்கத்தான் புறப்பட்டீ ரொன்றனையு மிரக்கவைத்தீ ரிதனுலென்ன,—இரக்கற்று னதிபாவ மிரப்பதுதீ தென்றாலு மின்மையாலே,—இறக்கப்போ னாலுமவர் சிறக்கப்போ வதுகரும மென்னலாமே. (9)

சிலபிரதிகளிலே அதிகமாகக் காணப்பட்ட பாட்டுகள்.

அட்டவணை

63. தானவனை - 24
64 - துப்பிடப்ப - 12
65 - தண்மாங்கள் - 19
66. தேரோடு - 25
67. நன்றிதரும் - 11
68 நாற்கவியும் - 17
69 நிலஞ்சேரு - 27
70 நித்தமெகு - 29
71 நேற்றுள்ளார் - 17
72 நேசமுடன் - 22
73 நொக்தலரும் - 28
74 பருங்கோலம் - 20
75 பசங்கருணை - 21
76 பரியாமலிடு - 14
77 பாசநியாசன் - 17
78 பணித்தானை - 24
79 பண்ணைகவே - 24
80 பார்க்குளாறி - 29
81 பிறக்கும்போ - 19
82 பிரசமுன்றி - 21
83 புல்லறிவு - 10

84. புனங்காட்டு — 26
85. பெருமையுடை — 27
86. பேருநாகள் 30
87. பேதானா. 25
88. பேரிசைக்கும். 16
89. பொலியவுளம். 18
90. பொற்கொடை 10
91. போதுஞ்சா. 23.
92. முக்கன்னர். 11
93. மேடைக்கே. 12
94. மன்னுநிகர். 13
95. மற்றவனோசா. 18
96. மாணொன்றும். 15
97. முன்னறிய. 15
98. மென்பெரியோர். 22
99. மையாலே. 26
100. மன்னுநிர். 22.
101. வம்பமெல்லா 29
102 வளமன்னிக்கும். 10
103 வக்கக்கார். 18

104. வள்ளுவர் நூல் 9

105. வடியாட்டு 18

106. வல்லமையான் 30

107. வார்க்கால் 19

108. விற்பணர்க்கு 20

109. வினைசெயமிகும் 20

110. வேதஞ்ஞி 9

111. வைதிடினும் 19

அட்டவணை முற்றிற்று.

புத்தகங்கள்.	விலை.		தபால்.	
	ரூபா.	அ.	அ.	பை.
விநாயகர்தோத்திரத்திரட்டு சதுர்த்திவிரத சரித்திரசங்கிரகம் ...	0	2	0	6
விநாயகபுராணம் வசனம்	2	,,	5	,,
நல்லாப்பிள்ளை பாரதம் செய்யுள் 2-வாலம் ...	9	0	15	,,
ஸ்ரீமகாபாரத வசனம் 4 வாலம்	5	8	14	,,
ஸ்ரீமகாபாகவத வசனம்	2	12	10	,,
கந்தபுராணச் செய்யுள் ...	7	0	14	,,
கந்தபுராணவசனம் படத்துடன் உபதேச காண்டம் செய்யுள் உள்பட 2-வாலம் ...	5	0	13	,,
உபதேசகாண்டம் செய்யுள் 4,384 ...	2	0	4	,,
கம்பராமாயணம் செய்யுள் 7 காண்டம் ...	6	0	14	,,
பெரியபுராணம் படத்துடன் வசனம் ...	3	8	6	,,
திருவிளையாடற்புராணம் படத்துடன்வசனம் ...	2	8	6	,,
தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டுஉரை...	3	4	6	,,
தமிழ்பெரிய அகராதி ...	3	8	8	,,
அகத்தியத்திரட்டு அல்லது அருட்பா ...	1	8	4	,,
ஞானவாசிட்டம் நூதனக்கருத்துரையுடன் ...	2	8	6	,,
வைணவபக்தவிஜயம் வசனம் ...	2	8	6	,,
வைணவ நித்தியாநு சந்தானம் தென்கலை ...	,,	6	1	,,
ஷை வடகலை ...	,,	4	1	,,
சிவதருமோத்திரம் மூலமுமுரையும் ...	1	8	4	,,
காசிரகசியம் வுரையுடன் ...	3	,,	4	,,
விவேகசிந்தாமணிவசனம் சகலசாஸ்திரவிளக்கம்	2	,,	4	,,
அசுவசாஸ்திரம் மாட்டுவாகடம் ...	2	,,	2	,,
வைவித்தியராஜ சிந்தாமணி ...	1	8	3	,,
ஐந்திலக்கணத்தொன்னூல்விளக்க மூலமுமுரையும்	1	8	3	,,
சித்தியார்சுபக்ஷம் ஞானப்பிரகாசர்வுரை ...	1	4	2	,,
பட்டணத்தார்பாடல்முழுமையும்அவர்சரித்திரமும்	1	4	4	,,
மார்க்கண்டேயர் புராணவசனம் 24 அத்தியாயம்	1	4	2	,,
சிதம்பரசபாநாதபுராணம் ...	1	,,	2	,,
வேதநாயகம்பிள்ளை கீர்த்தனை ...	1	,,	2	,,

பெரியவிநோதரசமஞ்சரி ...	,,	12	4	,,
86-புத்தகங்களடங்கிய தோத்திரத்திரட்டு ...	,,	10	2	,,
காசிமான்மியம் தலயாத்திரைப்பொதுவிதி ...	,,	8	2	,,
சிவஞானபோதச்சிற்றுரை ...	,,	8	1	,,
கைவல்லியமூலமும் உரையும் ...	,,	6	1	,,
திருப்போரூர் சந்நிதிமுறை ...	,,	5	1	,,
திருத்தணிகைச் சந்நிதிமுறை ...	,,	4	1	,,
சர்வசாட்சிமாலை கடவுள்அந்தாதி ...	,,	4	1	,,
பஞ்சதந்திரப்பாடற்கதை ...	,,	4	1	,,
சைவதூஷணபரிகாரம் ...	,,	4	1	,,
சிவசிவவெண்பா சோமர்வெண்பா ...	,,	2	,,	6
ஔவைக்குறள் ...	,,	2	,,	6
படிக்காசுப்புலவர் செய்தருளிய கலம்பகம் ...	,,	2	,,	6
அறப்பளீசுரசதகம் ...	,,	2	,,	6
குமரேசசதகம் ...	,,	2	,,	6
மணவாள நாராயணசதகம் ...	,,	2	,,	6
கலிங்கத்துப்பரணி ...	,,	4	1	,,
ஒருபாஉண்மை உபதேசம் உரையுடன் ...	,,	8	1	,,
சிவபூசைத்திரட்டு ...	,,	2	,,	6
தட்சணகைலாச புராணம் ...	,,	8	1	,,
காளிதாசன் சரித்திரம் ...	,,	3	1	,,
நாலுபாவை ஒக்கபில்லேரி ...	,,	2	,,	6
ஆளுடைய பிள்ளையார் அந்தாதி ...	,,	2	1	,,
திருவிளையாடற்புராணம் உரையுடன் ...	12	,,	12	,,
பிங்கல நிகண்டு ...	2	8	3	,,
உரிச்சொல் நிகண்டு ...	,,	8	2	,,
ஸ்ரீமத் சரவண தேசிகர் அருளிச்செய்த சாத்திரத்திரட்டு ...	,,	1	,,	6
திருக்குறள்—பரிமேலழகர் உரையும் தெளிபொருள் விளக்கப்பதவுரையும், காவிகோ கட்டடம். ...	3	8	6	,,
திருக்குறள்—பரிமேலழகர் உரையும் தெளிபொருள் விளக்கப்பதவுரையும், ஆங்கிலேயமொழிபெயர்ப்புகளுடன். ...	5	,,	8	,,